**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 94** **நாள்: 07.08.2017**

# மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சீர்மிகு நகரம் (Smart City) ஏற்படுத்துவது குறித்த ஒருங்கிணைந்த துறை அலுவலர்களுக்கு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை பயிற்சி பட்டறை துவக்க விழா நடைபெற்றது.

**********

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் தலைமையில் சீர்மிகு நகரம் (Smart City), கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்துவது குறித்த ஒருங்கிணைந்த துறை அலுவலர்களுக்கு பயிற்சி பட்டறை (Collaborative Workshop on Command and Control Centre) துவக்க விழா இன்று (07.08.2017) சென்னையில் நடைபெற்றது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை பயிற்சி பட்டறையை துவக்கி வைத்து பேசும்போது தெரிவிக்கையில், தமிழக வரலாற்றில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலம் பொற்காலம் ஆகும். தமிழகத்தில் எந்த ஆட்சிக்காலத்திலும் செய்யாத சாதனையாக, நிதி ஒதுக்கீடு செய்தும், இணை சொல்ல முடியாத திட்டங்களின் மூலம், எண்ணற்ற பணிகளை மேற்கொண்டும், சரித்திர சாதனைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் படைத்துள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்திய நாடே வியக்கும் வகையில், ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி, தமிழக மக்களின் நல்வாழ்விற்காக, இரவு பகல் பாராது, அயராது பாடுபட்டு, தனது இன்னுயிரை ஈந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, மக்கள் நலப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்லாட்சி வழங்கி வருகிறது.

இந்தியா முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 109 நகரங்களில், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்துடன், மத்திய அரசு ஜுன் 2015ஆம் ஆண்டில், சீர்மிகு நகரம் **(Smart City)** எனும் திட்டத்தை துவக்கியது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பரிந்துரையை ஏற்று, மத்திய அரசு தமிழகத்தில், 12 நகரங்களை சீர்மிகு நகரமாக மேம்படுத்த தேர்வு செய்துள்ளது. தமிழகத்தில் சீர்மிகு நகர திட்டத்தை செயல்படுத்த, 2015–16ஆம் ஆண்டில், முதலாவதாக சென்னை மற்றும்

கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. இரண்டாவது வருடத்தில், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. தற்போது திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாநகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகள் வரும் ஆண்டில் தேர்வு செய்யப்படவுள்ளன.

சீர்மிகு நகரத்திட்டத்தை, 5 ஆண்டு காலத்தில் (2015 – 2020) முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சீர்மிகு நகரத்திற்கும், மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் பங்கீடாக, முறையே 500 கோடி ரூபாய் வழங்கப்பட உள்ளது. இந்த நிதியாண்டு முதல், சீர்மிகு நகரங்களுக்கான திட்டங்கள் அனைத்தும் துவக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு, மத்திய அரசின் சார்பில் 372 கோடி ரூபாய், தமிழக அரசின் சார்பில் 400 கோடி ரூபாய் என 772 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுரை, தஞ்சாவூர், சேலம் மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு, மத்திய அரசின் சார்பில் 428 கோடி ரூபாய், தமிழக அரசின் சார்பில் 440 கோடி ரூபாய் என 868 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகரம் தன்னிறைவுடன், நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீரிய பொருளாதாரத்தை கொண்ட, உலகத்தரத்திலான நகரமாக மாற்றப்பட உள்ளது. இரயில் போக்குவரத்து, மாநகர பேருந்து போக்குவரத்து, பாதுகாப்பான நடைபாதை மற்றும் சைக்கிள் தடங்கள் போன்ற பல்வேறு போக்குவரத்து வழிகளை ஒருங்கிணைத்து, தனிநபர் பயன்பாட்டிற்கு உகந்தவாறு மேம்படுத்தி, நகர்ப்புற போக்குவரத்து இயக்க மேம்பாட்டு திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. குறைந்த மின்சாரத்தில் அதிக ஒளிதரும் தெருவிளக்குகள், மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டம், தடையில்லா குடிநீர், மற்றும் கழிவுநீர் வடிகால் திட்டம், தகவல் தொடர்பு தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற நடைபாதைத் திட்டம், மோட்டார் அல்லாத வாகன போக்குவரத்தை மேம்படுத்தும் திட்டம், மின் இணைப்பு மேம்பாடு மற்றும் சூரியமின் உற்பத்தி திட்டம் ஆகிய திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

பொதுமக்களின் வாக்கெடுப்பின் அடிப்படையில், தியாகராயநகர் “பகுதி சார்ந்த வளர்ச்சி” திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தில், 40 இனங்களில் திட்டங்கள், 877 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் மேம்படுத்தும் திட்டத்தில், 8 இனங்களில் திட்டங்கள், 488 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில், தியாகராய நகரில், பாண்டி பஜார் – தியாகராய சாலையில், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாதசாரிகள் வளாகம் அமைக்கப்படவுள்ளது. மேலும், தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில், 36 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்பட உள்ளது. பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் செயல்படுத்தும் திட்டத்திற்கு மொத்தம் 1,366 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பணிகளில், ‘‘ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்’’ அமைக்கும் பணியும் ஒன்றாகும். சென்னை மாநகரின் நிலையான, ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான மாற்றங்களை, மக்கள் பங்களிப்போடு, நகரில் உள்ள அனைத்துத் துறைகளின், ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவதே, ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

வெவ்வேறு துறைகளின் விவரங்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, நடைமுறைகளை ஆய்வு செய்து, மிக அதிக அளவு விவரங்களை, கையாளும் முக்கிய பணியைச் செய்யும் வகையில், இத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் மற்ற துறைகளின் கருத்துக்களை அறிந்து செயல்படுத்த, இந்த கலந்தாய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து துறைகளிலிருந்தும், ஒரு அனுபவமிக்க அதிகாரியை நோடல் அலுவலராக நியமிக்கும்படி, துறைகளின் தலைமை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில், சென்னை ஸ்மார்ட் சிட்டி குழுமத்தின் ஒருங்கிணைந்த கலந்தாய்வுக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மற்ற துறையைச் சேர்ந்த அனைவரும், திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளை, பகிர்ந்து கொள்வதே இந்த கலந்தாய்வு கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுபாட்டு மைய பயிற்சிப் பட்டறை, மகத்தான வெற்றி பெற, உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி.டேவிதார் இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர்/சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் தலைவர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் (TNUFSIL) திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை

இயக்குநர் (TUFIDCO) திரு.சந்திரகாந்த் பி.காம்ப்ளே, இ.ஆ.ப., சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் திரு.விஸ்வநாதன், இ.கா.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திரு.வி.அன்புச்செல்வன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., மேலும்,

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை,
வருவாய் துறை,
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி, போக்குவரத்துத் துறை,
சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
காவல்துறை,
போக்குவரத்து காவல்துறை,
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்,
தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (ELCOT),
சென்னை மாநகர போக்குவரத்து,
மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்,
பி.எஸ்.என்.எல்.,
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி,
சுற்றுச்சூழல் துறை,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித்துறை,
தகவல் தொழில்நுட்பத் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கல்வித்துறை,
பொதுப்பணித்துறை,
அண்ணா பல்கலைக்கழகம்,
நிதித்துறை,
தமிழ்நாடு இ–சேவை நிறுவனம்,
சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம்,
தேசிய சுகாதார சங்கம்,
தமிழ்நாடு நுகர்வோர் நிதி மேலாண்மை நிறுவனம் உட்பட பல்வேறு துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**